# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 03.06.2025

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1020/B/2020**

திரு.A.வெங்கடேஷ் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்,
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 21.03.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொது தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த விசாரணையின் போது நேரில் ஆஜராகி, அன்றைய பொது தகவல் அலுவலர் திரு.ஆஷிஸ் ராவத், இ.கா.ப அவர்களின் விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்தார். விசாரணை அறிக்கை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர் தனது மனுவினை பொது தகவல் அலுவலர், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், அம்பாசமுத்திரம் என்ற முகவரிக்கு அனுப்பியுள்ளார் எனவும், மனுதாரர் உரிய பொது தகவல் அலுவலரிடம் மனு சமர்ப்பிக்காமல் அம்பாசமுத்திரம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு முகவரியிட்டு மனு சமர்ப்பித்துள்ளதால், அப்போதைய பொது தகவல் அலுவலரான தனது பார்வைக்கு மேற்கண்ட மனு கிடைக்கப்பெறவில்லை எனவும், மனுதாரர் 12.06.2019 அன்று காவல் துணை கண்காணிப்பாளர், அம்பாசமுத்திரம் உட்கோட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவிற்கு பதிலறிக்கை கிடைக்கப்பெறவில்லை என கடந்த 07.08.2019 அன்று மேல்முறையீட்டு மனுவினை திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பியிருந்த மனுவினை பெற்று உரிய பதிலறிக்கையானது கடந்த 18.11.2019 அன்று மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அப்போதைய பொது தகவல் அலுவலர் அவர்களின் விளக்க அறிக்கையினை இவ்வாணையம் ஏற்றுக் கொண்டு, மேற்கூறிய வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1020/B/2020</u>**
**<u>பெறுநர்</u>**

காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001.

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001.

திரு.A.வெங்கடேஷ்
214/129, கீழப்பாளையம் தெரு
தென்காசி 627 811.

Copy to: File

VMPA - 04/06/2025